1969 மார்ச் 22]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 200 ரூபாய் வேறு, 80 ரூபாய் வேறு என்று கொடுக்கவில்லை. மொத்தமாக 200 ரூபாய் கொடுக்கப்பட்டதாக என்னுடைய நினைவு. அந்தந்த இடங்களில் ஏற்படுகின்ற தீ விபத்துக்களின் கோரத் தன்மைக்கு ஏற்ப, மற்ற நிலைமைகளுக்கும் ஏற்ப உதவிகள் செய்யப்படுகின்றன. அந்தப் பகுதி முஸ்லீம் மக்கள் வாழுகின்ற பகுதி. அரசாங்கமும் வீடுகள் கட்டி அவர்களும் குடிசைகள் எழுப்பும் நிலைமை இருக்கக்கூடாது என்றுதான் அந்த உதவித் தொகை கொடுக்கப்பட்டது.

THIRU B. VENKATASWAMY : Government is giving for the fire victims Rs. 80 The amount is insufficient to reconstruct the hut. Will the Government think of supplying bamboos and timber to these people to reconstruct their houses ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பழைய சர்க்கார் இதையே கூடக் கொடுக்கவில்லை. இப்போது 80 ரூபாய் கொடுக்கிறோம். முன்பு இருந்த சர்க்கார் 40 ரூபாய்தான் கொடுத்து வந்தது. அந்த அளவுக்கு உதவி செய்வதில் முன்னேறியிருக்கிறோம். மற்ற வசதிகளை எல்லாம் செய்து கொடுப்பது என்றால் அதெல்லாம் வசதிகளுக்கேற்ப, நிலைமைகளுக்கேற்ப கவனிக்கப்படும்.

திரு. கரு. ராம. சுரியமாணிக்கம் அம்பலம் : நமது மாநிலத்திலே ஓலை வீடுகள்தான் அதிகமாக இருக்கின்றன. அதனால் அடிக்கடி தீ விபத்தால் பாதகம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. தீ பிடித்து விட்டால் அதற்குச் சரியான அளவுக்கு ஈட்டுத் தொகை கொடுக்க முடியவில்லை என்பதை மனதில்கொண்டு கூரை வீடுகளுக்கு இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மிகப் பெரிய சமுதாயப் பிரச்சனைகளுக்குக் கேள்வி நேரத்திலேயே பரிகாரம் தேடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். உணவு, உடை, வீடு இந்த மூன்றும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இருக்க வேண்டும், சுகாதாரத்தோடு வாழ வேண்டிய அளவுக்கு வீடு அமையவேண்டுமென்ற சமதர்மத் திட்டத்தை இந்த அரசு கொண்டிருக்கிறது. இது போகப் போக நிலைமைகளுக்கேற்ப சமுதாயத்தில் ஏற்படுத்தித் தீர வேண்டிய ஒன்று.

திரு. டி. மார்டின் : இந்த உடன்குடித் தொகுதியில் தீ விபத்துக்கு ஆளானவர்களில் பெரும்பாலோர் பனைமரத் தொழிலாளர்கள். அவர்கள் கருப்புக்கட்டி உற்பத்திசெய்து வைத்திருந்தது எல்லாம் அந்த தீ விபத்திலே சேதமாகிவிட்ட காரணத்தால் அவர்களுக்குக் கொஞ்சம் அதிக அளவுக்கு உதவிசெய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊர் என்ற காரணத்திற்காக அரசாங்கம் பாரபட்சம் காட்ட முடியாது. அப்படிக் காட்டினால் மற்ற உறுப்பினர்களுடைய தொகுதியைப் பொறுத்து பாரபட்சம் காட்டியதான பழி அரசாங்கத்துக்கு வந்துவிடும்.

*414—*Q.* THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether tiles for the construction of houses for the fire victims have been donated to Government by Madras City firms ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை ஸ்ரீ கிருஷ்ணு ஓடுகள், மட்பாண்டப் பொருள்கள் றுவனம் 60,500 ஓடுகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

மதுரை நகரில் குடி நீர் நெருக்கடி.

* குறுகிய கால வினு எண் 3.—**திருமதி. கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் என்றுமில்லாத வகையில் குடி தண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், நெருக்கடியைத் தவிர்க்க அரசு மேற்கொண் டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

மு.ப. 9–30 (இ) மதுரையில் கடும் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதென் றும், ஆழ்துளைக் கிணறு விசையேற்றங்களுக்கு (deep borewell pumps) வகைசெய்வதற்கும், லாரிகளை வாங்குவதற்கும் அரசிடமிருந்து ரூ. 50 லட் சம் கடன்பெற நகராட்சிமன்றம் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ள தென்றும், குறிப்பிட்டு மதுரை நகராட்சி மன்றத்தின் தலைவர் மாண்பு மிகு உறுப்பினருக்கு அனுப்பிய தந்தியின் நகல் ஒன்றை அவர் அனுப்பியுள்ளார். விரிவான கடிதம் ஒன்று அனுப்பப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்தகைய கடிதம் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. நீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டங்கள் இரண்டினை மதுரை நகராட்சிமன்றம் மேற்கொள்வதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவற்றில் ஒரு திட்டத்திற்கு ரூ. 89.3 லட்சம் செலவாகும். இத்திட்டம் மிகவும் முன்னேறிய நிலையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மற்றொரு திட்டத்திற்கு ரூ. 197 லட்சம் செலவாகுமென முன்னர் மதிப்பிடப்பட்டது. சில இடர்பாடுகளினுல் இத்திட்டம் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. நகராட்சியிடமிருந்து விரிவான கடிதம் வரப்பெற்றவுடன் இத்திட்டத்திற்கு முதனுரிமை அளிக்கப்பட்டு, அதைக்குறித்து மேலும் ஆய்வு செய்யப் படும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, தற்பொழுது ஏற்பட்டிருக்கும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உடனடியாக வைகை அணைக் கட்டிலேயிருந்தோ அல்லது பெரியாறு அணைக்கட்டிலிருந்தோ தண்ணீர் திறந்துவிட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இரண்டாவதாகத் திட்டப்பட்டத் திட்டத்திலிருந்து பேரணை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்குப் பதிலாக வைகை அணையிலிருந்து கொண்டுவரு வதற்கான ஆய்வுகளையெல்லாம் தனியாக ஒரு பப்ளிக் ஹெல்த் இன்ஜினிய ரிங் சப்-டிவிஷன் மூலமாக ஆராய்ச்சிசெய்து, அது முடிந்தபின் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அதனுல் சீக்கிரத்திலேயே இப்பொழுது ஏற் பட்ட நெருக்கடியைத் தீர்க்க முடியுமென்று அரசாங்கம் நம்புகிறது.

திரு. ஏ. முனியாண்டி : தற்போது ஏற்பட்டிருக்கும் குடிநீர்ப் பஞ் சத்தைப் போக்குவதற்கு மஞ்சளாறு உபரித் தண்ணீரை மதுரைக்குக் கொண்டுவர ஆலோசனை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எந்த வகை யிலே எந்தப்படியான திட்டத்தின்மூலம் விரைவில் மதுரையிலே ஏற் பட்டிருக்கும் தண்ணீர் நெருக்கடியைத் தீர்க்க முடியுமென்று தந்தியைத் தொடர்ந்து கடிதம் எழுதுவதாக மதுரை நகராட்சித் தலைவர் அவர்கள் தந்தியிலேயே தெரிவித்திருக்கிறுர்கள். இன்னும் விரிவான கடிதம் வரவில்லை. எனவே, நகராட்சி எந்தவிதமான எண்ணம் வைத்திருக் கிறது என்பதைப் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு கனம் உறுப்பினர் அவர்களின் கருத்துப்படி வேறு பல ஆறுகளிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருகின்ற முறைகளை அரசாங்கம் ஆலோசிக்கும்.